**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.05/2026 மற்றும் 06/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.174/2020**

சண்முகத்தாய் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

வேல்ராஜ் ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுக்களானது 27.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ், இவ்வழக்கில் இறந்துபோன முத்தம்மாள் என்பவரின் வாரிசு என மனுதாரரை இந்நீதிமன்றம் O.S.No.172/2020 வழக்கில் வழங்கிய தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு வா.சா.1 ன் முதல்நிலை சாட்சியத்தை அளிக்க அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.21 18:11:55 +0530

செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.05/2026 மற்றும் 06/2026—ன் மனுக்களின் சுருக்கம்:—**

இம்மனுக்களின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கு வா.சா.1 ஆன மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் முதல் விசாரணையில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரை மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு பிராதுடன் 03.01.2013 தேதிய பதிவு உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணத்தை மனுதாரர் முதல் விசாரணையில் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு சொத்துக்களையும், வேறு சொத்துக்களையும் பொறுத்து முத்தம்மாள் என்பவர் மனுதாரரை வளர்ப்பு மகள் என்ற வகையில் 03.01.2014 தேதியில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி உயில் ஆவணத்தின் அடிப்படையில் இறந்துபோன முத்தம்மாள் என்பவருக்கு வாரிசு என தீர்மானிக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் மு.வ.எண்.172/2020 என அரசாங்கத்தின் மீது வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த வழக்கு இருதரப்பு முழுமையான விசாரணைக்கு பின்பு, முத்தம்மாள் என்பவருக்கு மனுதாரரை வாரிசு என 19.01.2024 தேதியில் இந்நீதிமன்றம் தீர்ப்பு செய்துள்ளது என்றும், மேற்படி இந்நீதிமன்ற மு.வ.எண்.172/2020 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை இவ்வழக்கில் தாக்கல் செய்ய விடுபட்டுவிட்டது என்றும், மேற்படி மு.வ.எண்.172/2020 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை மனுதாரருடைய வீட்டில் வைத்துள்ள பழைய ஆவணங்களுடன் கலந்துவிட்டதால், இவ்வழக்கில் மனுதாரரை முதல் விசாரணை செய்யும்போது தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், தற்போது மேற்படி இந்நீதிமன்ற தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற விபரம் மனுதாரருக்கு தெரியவந்தவுடன், மனுதாரருடைய வீட்டில் உள்ள பழைய ஆவணங்களை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:02 +0530

மிகவும் சிரத்தை எடுத்து தேடி பார்த்ததில் மு.வ.எண்.172/2020 வழக்கின் தீர்ப்பாணை மட்டும் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையுடன் மு.வ.எண்.172/2020 வழக்கின் தீர்ப்புரையை ஆன் லயனில் நகல் எடுத்துள்ள வா.சா.1 ஆன மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து சான்றாவணங்களாக குறியீடு செய்து தாக்கல் செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்படி மு.வ.எண்.172/2020 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை முதல் விசாரணையில் தாக்கல் செய்யாதது வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்றும், மனுதாரரை அறியாமல் தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், ஆகையால், இவ்வழக்கில் இறந்துபோன முத்தம்மாள் என்பவரின் வாரிசு என மனுதாரரை இந்நீதிமன்றம் O.S.No.172/2020 வழக்கில் வழங்கிய தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு வா.சா.1ன் முதல்நிலை சாட்சியத்தை அளிக்க அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக் கோரியும் இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**இ.ம.எண்.6/2026ல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.05/2026–ல் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**</u>

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தரப்பில் கட்டாய விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் தரப்பில் கட்டாய விசாரணைக்கு ஆஜராகாமல் பல வாய்தாக்கள் வாங்கிய பின்பு கடைசி வாய்தாவில் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தங்கள் தரப்பு சான்று ஆவணங்களை குறியீடு செய்து அதன்பின்பு பிரதிவாதி வாதியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்ட நிலையில் பல வாய்தாக்கள் மனுதாரர் தரப்பில் வாய்தாக்கள் வாங்கிய பின்பு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இருந்த நிலையில் மனுதாரர் தனது தரப்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:10 +0530

ஆவணங்களை குறியீடு செய்ய அசல் ஆவணங்கள் தற்பொழுது தான் கிடைத்தது என்றும், அந்த அசல் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்று மீண்டும் வாதி தரப்பில் ரீ–கால் செய்து அசல் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்திருந்த நிலையில் இந்நீதிமன்றத்தில் மனுதாரருக்கு செலவுத் தொகையுடன் மனு அனுமதித்த நிலையில் அதன் அடிப்படையில் மீண்டும் மனுதாரர்தரப்பில் குறியீடு செய்து மீண்டும் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய பல வாய்தாக்கள் ஏற்பட்டிருந்த நிலையில் மீண்டும் மனுதாரர் தரப்பில் பல வாய்தாக்கள் நீதிமன்றத்தில் ஆஜராகும் பொருட்டு வாய்தா செய்திருந்த நிலையில் மீண்டும் மனுதாரர் தரப்பில் தற்பொழுது சில ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய தாக்கல் செய்யும் ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே மனுதாரர் தரப்பு எதிர்மனுதாரரை வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர் செயல்படுகிறார் என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது வாதியால், பிரதிவாதிக்கு எதிராக பிராதின் 7 வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என விளம்புகை செய்து அதற்கு அனுசரணையாக பிராதின் 7 வது தபசில் பொதுநடைபாதையின் வழியாக வாதி எப்போதும்போல் பிராதின் 4 வது தபசில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:17 +0530

சொத்திற்கு சென்றுபோய் வந்துகொள்வதற்கு பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கக்கோரியும், பிராதின் 7வது தபசில் தென்வடல் பொதுநடைபாதையில் பிரதிவாதி நூதனமாக கட்டியுள்ள பிராதின் 8வது தபசில் கட்டுமானங்களை இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர் தினத்திற்குள் பிரதிவாதி அவர் செலவில் இடித்து அப்புறப்படுத்திப்போகும்படிக்கும் தவறும்பட்சத்தில் வாதியே பிரதிவாதியின் செலவில் இந்நீதிமன்றம் மூலம் இடித்து அப்புறப்படுத்திப்போகும் வகையில் மேற்படியாருக்கு எதிரில் ஒரு வலியுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது வா.சா.1–ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யவேண்டி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், காலதாமதமாக மனுதாரர்/வாதியால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரர் தரப்பில் இம்மனுவில், இ.ம.எண்.06/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது வீட்டில் தேடியதில் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) ஆனால், மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் மனுதாரரால் இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரரால் மனுக்களில் காலதாமதத்திற்காக கூறப்பட்டுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

9) மேலும், இம்மனுக்களின் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய பல வாய்தாக்கள் ஏற்பட்டிருந்த நிலையில் மீண்டும் மனுதாரர் தரப்பில் பல வாய்தாக்கள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:23 +0530

நீதிமன்றத்தில் ஆஜராகும் பொருட்டு வாய்தா செய்திருந்த நிலையில் மீண்டும் மனுதாரர் தரப்பில் தற்பொழுது சில ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய தாக்கல் செய்யும் ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) இருப்பினும், அசல் வழக்கானது விளம்புகை, வலியுறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரரால் இ.ம.எண்.06/2026 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) மேலும், மனுதாரரால் இ.ம.எண்.06/2026 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகள் குறித்து ஆவணம் குறியீடு செய்யப்படும் சமயத்திலோ அல்லது தீர்ப்புரை பகரப்படும்போது இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கக்கூடியதாகும். தற்போது, இ.ம.எண்.06/2026 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்விட கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

12) ஆகையால், அசல் வழக்கானது மறுதிறவு செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.06/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:29 +0530

அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**14) இறுதியாக**

**இ.ம.எண்.05/2026**

இம்மனுவானது ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 02.06.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 02.06.2026.

**இ.ம.எண்.06/2026**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 02.06.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 02.06.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.21 18:12:42 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.05/2026 and
I.A.No.06/2026
in
O.S.No.174/2020

**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 21.04.2026**